தமிழகம்

தொழில் நுட்பக் கல்வி–ஐ.ஐ.ஏ.(Indian Institute of Architects) தேர்ச்சி–பி.ஆர்க். (B.Arch.) பட்டத்திற்கு இணையானதாகக் கருதுவது–ஆணைகள்–வெளியிடப்படுகின்றன.

உயர்கல்வித் (ஐ2) துறை

அரசு ஆணை (நிலை) எண்.113 நாள் 30.3.2004

படிக்க:

1. அரசு ஆணை (நிலை) எண்.441, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை, நாள் 20.12.93
2. அரசு கடித எண்.29475/ஆர்/98–4, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை, நாள் 15.9.98
3. தொழில் நுட்பக் கல்வி இயக்குநரின் கடித எண். 15065/பி4/01 நாள் 15.6.2001, 8.10.2001, 27.2.2002, 27.3.2002
4. அரசு நேர்முகக் கடித எண்.23155/ஐ2/01–4, நாள் 29.4.2002
5. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையச் செயலாளர் கடித எண். 3202/ஆர்.என்.டி–எஃப்1/02 நாள் 23.12.2003

******

ஆணை

சென்னை, டாக்டர் தர்மாம்பாள் அரசினர் மகளிர் பாலிடெக்னிக் கல்லூரியில், அமைப்பியல் பிரிவில் மேம்படுத்தப்பட்ட முதுநிலை விரிவுரையாளராகப் பணியாற்றும் திருமதி விக்டோரியா ஷாநவாஸ் என்பவர், தான் 2000–ஆம் ஆண்டில் நடைபெற்ற ஐ.ஐ.ஏ. தேர்வில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றுள்ளதாகவும், அத்தேர்ச்சி பி.ஆர்க். பட்டத்திற்கு இணையானது என்றும், பதவி உயர்வு வழங்கப்படும் போது தன்னை பரிசீலிக்க வேண்டும் என்றும் கோரி விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளார் என்றும், இந்திய அரசின் மனித வளத்துறை (கல்வித்துறை) 5.8.1992 நாளிட்ட அறிக்கையில், மத்திய அரசுப் பணிகளின் கீழ் வரும் பணிகள் மற்றும் பதவிகளுக்கு ஐ.ஐ.ஏ. தேர்ச்சி, பல்கலைக் கழகங்களால் வழங்கப்படும் பி.ஆர்க். பட்டத்திற்கு இணையானதாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்து அவ்வறிக்கையில் குறிப்பிட்டுள்ள ஐ.ஐ.ஏ. தேர்ச்சி பி.ஆர்க். பட்டத்திற்கு இணையானது என்ற அறிவிப்பு தமிழ்நாடு மாநில அரசுப் பணிகளுக்கும் பொருந்துமா என்பதைத் தெளிவுபடுத்துமாறு, தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கல்வி நிறுவனங்களால் வழங்கப்படும் படிப்புப் பிரிவுகளுக்கு, வேலை வாய்ப்பின் பொருட்டு சமநிலை அங்கீகாரம் வழங்குவது குறித்து பரிந்துரை செய்ய குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு முன் மேற்குறிப்பிடப்பட்டுள்ள கருத்துருவை வைக்கும். அதன் கருத்தினைப் பெறுமாறு மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தின் மூலம் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையச் செயலாளர் கேட்டுக் கொள்ளப்பட்டார்.

3. மேலே ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், பல்கலைக் கழகங்களால் வழங்கப்படும் பி.ஆர்க். (Bachelor of Architecture) பட்டத்திற்கு இணையாக ஐ.ஐ.ஏ. (Indian Institute of Architects) தேர்ச்சியைக் கருதலாம் என மேற்படி குழு பரிந்துரைத்துள்ளதாகத் தேர்வாணையச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

4. தொழில் நுட்பக் கல்வி இயக்குநரின் கருத்துரு மற்றும் குழுவின் பரிந்துரை ஆகியவற்றை அரசு கவனத்துடன் பரிசீலித்து, குழுவின் பரிந்துரையை ஏற்றுக் கொள்ளலாம் என முடிவு செய்துள்ளது. அதன்படி, I.I.A. (Indian Institute of Architecture) தேர்ச்சயினை அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகங்களால் வழங்கப்படும் பி.ஆர்க். (Bachelor of Architecture) பட்டத்திற்கு இணையாகக் கருதலாம் என அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4-ல் வெளியிடப்பட்டுள்ள ஆணையின் அடிப்படையில் ஐ.ஐ.ஏ.(Indian Institute of Architects) தேர்ச்சியை பி.ஆர்க். (B.Arch.) பட்டத்திற்கு இணையாகக் கருதி தொடர்புடைய சிறப்பு விதிக்கு உரிய திருத்தம் வெளியிடத் தேவையான கருத்துருவை அரசுக்கு உடனடியாக அனுப்பி வைக்குமபடி தொழில் நுட்பக் கல்வி இயக்குநருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கு.ஞானதேசிகன்,
அரசு செயலாளர்.

பெறுநர்
தொழில் நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை-25
திருமதி விக்டோரியா ஷாநவாஸ், மேம்படுத்தப்பட்ட முதுநிலை விரிவுரையாளர்,
டாக்டர் தர்மாம்பாள் அரசினர் மகளிர் பாலிடெக்னிக் கல்லூரி, சென்னை-113 (தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் வழியாக)
நகல் பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் (ஆர்) துறை, சென்னை-9
செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-2
உயர்கல்வி (பி) துறை, சென்னை-9
இ.கோ/உதிரிகள்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.